# பட்டுக்கோட்டை நகராட்சி

ஸ்ரீ சார்வரி வருடம் வைகாசி மாதம் 16–ம் தேதி திருவள்ளுவராண்டு 2051 (2020–ம் ஆண்டு மே 29ம் தேதி) வெள்ளிக்கிழமை காலை 12.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை.. திரு. கா.சுப்பையா,
தனி அலுவலர்/ ஆணையர்.

**பொருள் எண்..1**

பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019–2020–ன் கீழ் பட்டுக்கோட்டை கண்டியன் தெரு நகராட்சி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் கலையரங்கம் மேடை அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினத்தந்தி நாளிதழில் 25.03.2020 அன்று பிரசுரம் செய்யப்பட்ட வகையில் பட்டியல் தொகை ரூ.9954/–யை (பில்.எண்.TNJ1920-0015913,நாள்.25.03.2020) தினத்தந்தி நிறுவனத்தாருக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
| | 2) செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண். 5134/2019/இ1) |

**தீர்மானஎண்.. 459 … அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது …**

**பொருள் எண்..2**

பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் –2019–20ன் கீழ் கண்டியன்தெரு நகராட்சி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் கலையரங்க மேடை அமைக்கு பணிக்கு 31.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1. | கண்டியன்தெரு நகராட்சி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் கலையரங்க மேடை அமைக்கு பணி | ரூ.8,00,000/– | எஸ்.கணேசன் பட்டுக்கோட்டை | 0.09 % குறைவு |
| | | | கே.எடிசன் பட்டுக்கோட்டை | 2.56 % அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை எஸ்.கணேசன், ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ளார். இவ்ஒப்பந்தப்புள்ளியானது கே.எடிசன் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை விட குறைவாக உள்ளது. ஆகவே எஸ்.கணேசன், ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள எஸ்.கணேசன், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) இப்பணிக்கான செலவினத்தினை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 5134/2019/இ.1) |

**தீர்மானஎண்.. 460 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

<u>பொருள் எண்..3</u>

பட்டுக்கோட்டை நகராட்சி பகுதியில் 14வது மத்திய நிதி ஆணையத்தின் கீழ் சாலைப் பணிகள் செய்திட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை 08.01.2020 அன்று தினமணி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்ட வகையில் பட்டியல் தொகை ரூ.3486/—யை ( பில்.எண்.AD/1171/I, Date:31.01.2020) Adwave advertisting private limited , Chennai நிறுவனத்தாருக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
| | 2) செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.கஎண். 5135/2020/இ1) |

**தீர்மானஎண்.. 461 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

<u>பொருள் எண்..4</u>

பட்டுக்கோட்டை நகராட்சிக்கு பாத்தியப்பட்ட நகராட்சி பள்ளிகளில் உள்ள கட்டிடங்களில் ஏற்பட்டுள்ள சிறு,சிறு பழுதுகளை சீர்செய்ய வேண்டும் என நகராட்சி பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் விண்ணப்பம் அளித்ததன் பேரில் , நகராட்சி பள்ளி கட்டிடங்கள் நேராய்வு செய்யப்பட்டு , கீழ்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | புனரமைக்க வேண்டிய நகராட்சி பள்ளிகளின் விபரம் | தோராய மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | கடைத்தெரு மற்றும் லெட்சத்தோப்பு நகராட்சி தொடக்கப்பள்ளி | 3.50 |
| 2. | வளவனபுரம் மற்றும் நரியம்பாளையம் நகராட்சி தொடக்கப்பள்ளி | 4.50 |

மேற்கண்ட பணியின் அவசியம் கருதி, நகராட்சி தொடக்கப்பள்ளிகளை புனரமைப்பு செய்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலக குறிப்பு | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
|---|---|
| | 2) செலவினத்தினை கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.கஎண்.111/2019/இ1) |

**தீர்மானஎண்.. 462 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**<u>பொருள் எண்..5</u>**

பட்டுக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட கரிக்காடு பகுதியில் SSA school வளாக பகுதியில் அமைந்துள்ள சத்துணவு கூடத்தில் மேற்கூரை பகுதி சேதமடைந்துள்ளதால் , சேதமடைந்துள்ள மேற்கூரை பகுதியினை அப்புறப்படுத்தி புதியதாக G.I Sheet மூலம் மேற்கூரையினை அமைத்திடவும், வண்ணம் பூசிடவும் தயார் செய்யப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.1.40 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலக குறிப்பு | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
|---|---|
| | 2) செலவினத்தினை கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.கஎண். 1247 /2020/இ1) |

**தீர்மானஎண்.. 463 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**<u>பொருள் எண்..6</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி அலுவலக வளாக கணினி வரிவசூல் மையத்தில் குளிர்சாதன இயந்திரம் 2 எண்ணம், ஆணையர் குடியிருப்பு மற்றும் பொறியாளர் அறைக்கு தலா ஒரு எண்ணம் குளிர்சாதன பெட்டி (1.5 டன் கொள்ளளவு) அமைக்கும் பணிக்கு 12.05.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1. | அலுவலக வளாக கணினி வரிவசூல் மையத்தில் குளிர்சாதன இயந்திரம் 2 எண்ணம், ஆணையர் குடியிருப்பு மற்றும் பொறியாளர் அறைக்கு தலா ஒரு எண்ணம் குளிர்சாதன பெட்டி (1.5 டன் கொள்ளளவு) அமைக்கும் பணி | ரூ.2,50,000/– | எஸ்.கணேசன் பட்டுக்கோட்டை | 0.05 % குறைவு |
| | | | கே.எடிசன், பட்டுக்கோட்டை | 3.15 % அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ளார். இவ்ஒப்பந்தப்புள்ளியானது கே.எடிசன், ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை விட குறைவாக உள்ளது. ஆகவே எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1)வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) செலவினத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1247 /2020/இ.1) |

**தீர்மானஎண்.. 464 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**<u>பொருள் எண்..7</u>**

பட்டுக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய கட்டம்—1 கடை எண்கள்..1 முதல் 4 வரையிலும் மற்றும் கட்டம்—3 கடை எண்கள்..1 முதல் 22 வரையிலும் மற்றும் பழைய பேருந்து நிலையத்திலுள்ள உணவகம் ஆகியவைகள் சேர்த்து மொத்தம் 27 கடைகள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 218(1), (2)—ன்படி அபாயகரமான கட்டிடமாக உள்ள காரணத்தினால் அவற்றை ஏல இன பட்டியலில் இருந்து நீக்கம் செய்யவும் மற்றும் மேற்படி கடைகளை இடித்து அப்புறப்படுத்திட நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..185, நாள்.. 31.07.2017—ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..542, நாள்.. 31.10.2018—ன்படி 9 ஆண்டு குத்தகை முடிந்த இனத்திற்கு வாடகை மறு மதிப்பீடு செய்யும்பொழுது மேலே குறிப்பிட்டுள்ள 27 கடைகள் தவிர்த்து வாடகை மறு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாலும், பொது மக்கள் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு பழுதடைந்த 27 கடைகளை ஆய்வு செய்து இடித்திட உரிய அனுமதி வழங்கக் கோரி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களுக்கு 19.02.2019 மற்றும் 12.12.2019—ல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களது கடித ந.க.எண்..4060/2019/இ1, நாள்.. 10.01.2020—ன்படி மேற்படி கட்டிடத்தினை பொதுப்பணித் துறை செயற்பொறியாளர், கட்டிட கோட்டம் அவர்களிடம் உறுதி தன்மையை நேராய்வு செய்து அறிக்கை பெற்று நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, மேற்படி கட்டிடத்தினை விரைவில் இடித்து அப்புறப்படுத்திட கட்டிடத்தின் உறுதி தன்மை குறித்து நேராய்வு செய்து சான்று வழங்கிட செயற் பொறியாளர், பொதுப்பணித் துறை, கட்டிட கோட்டம், தஞ்சாவூர் அவர்களுக்கு 28.01.2020—ல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதன் அடிப்படையில், செயற்பொறியாளர், (பொ.ப.து) கட்டிட (க & ப) கோட்டம். தஞ்சாவூர் அவர்களது கடிதம் ந.க.எண்..104/கோ.18/இ.வ.அ—1 (வ.பி) /2020, நாள்.. 20.05.2020—ல் கட்டிடங்களை ஆய்வு செய்ததில், கட்டிடங்களின் மேற்கூரை (RCC Slab) முற்றிலும் சேதமடைந்து மிகவும் மோசமாக உறுதி தன்மையற்ற நிலையில் உள்ளதாலும், கட்டிடத்தின் சுவர்கள் விரிசல் ஏற்பட்டு மோசமான நிலையில் உள்ளதாலும், மேலும் பொது மக்கள் அதிகம் வந்து செல்லக்கூடிய வகையில் உள்ள இக்கட்டிடங்கள் முழு பயன்பாட்டிற்கு உகந்தது இல்லை என சான்றளித்து கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஆகவே, மேற்கண்டவற்றின் அடிப்படையில் பொது மக்கள் பாதுகாப்பு நலன் கருதி மேற்படி 27 கடைகளை முழுவதுமாக இடித்து அப்புறப்படுத்தி ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலக குறிப்பு** | 1) மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 218(1), (2)–ன்படி அபாயகரமான கட்டிடமாக உள்ள காரணத்தினால் மேற்படி 27 எண்ணிக்கை கடைகளை ஒப்பந்தப்புள்ளி மூலம் இடித்து அப்புறப்படுத்துவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்..5439/2018/இ1) |

**தீர்மானஎண்.. 465 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**<u>பொருள் எண்..8</u>**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் விதி எண்–110–ன் கீழ் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்வேறு துறைகளில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களை,"தூய்மை பணியாளர்கள்"(Cleanliness workers) என்று அழைக்கப்படு வார்கள் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதன்படி அரசாணை (நிலை) எண்..53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.3)துறை நாள்..21.05.2020–ல் துப்புரவு பணியாளர்களை இனி தூய்மை பணியாளர்கள் (Cleanliness workers) என மாற்றம் செய்து வெளியிடப்பட்ட அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு .. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
(ந.க.எண்..1144/2020/எச்1)

**தீர்மானஎண்.. 466 ... பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது ...**

**<u>பொருள் எண்..9</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட மஹாராஜசமுத்திரம் கிராமம் பழைய புலஎண்..137/1,137/2 புதிய நகரளவை எண்.. 9/1, 9/2, 9/5 திட்டப் பரப்பளவு 1.78.92 ஹெக்டேர் பரப்பளவில் அடங்கிய இடத்தில் அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட (G.O.(Ms) No.1167, Dt: 19.12.1989 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை) முழுமை திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள 80 அடி அகல சாலையினை(A2 A2) நீக்கம் செய்து தருமாறு நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், திருச்சிராப்பள்ளி கோட்டம் அவர்களின் கடித ந.க.எண்.. 824/இநிபொ(தி)/2019, நாள்.. 28.11.2019 மூலம் கோரப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து, நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் கடிதம் ந.க.எண்..3014/2019/தம3, நாள்.. 28.01.2020ன்படி மேற்படி நீக்கம் செய்யக் கோரும் திட்ட சாலை தொடர்பான விபரங்களை தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழ்களில் பிரசுரம் செய்து 30 நாட்களுக்குள் பொது மக்களிடம் ஆலோசனை மற்றும் ஆட்சேபணை ஏதும் பெறப்பட்டிருப்பின் அதன் விபரம் குறிப்பிட்டு உள்ளூர் திட்டக் குழும தீர்மானத்துடன் முழுமை திட்ட சாலை நீக்கம் செய்யக் கோரிய உத்தேசத்தினை அனுப்பிவைக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், பட்டுக்கோட்டை உள்ளூர் திட்ட குழுமத்தால் ஆலோசனை மற்றும் ஆட்சேபணை தெரிவிக்க கோரி 80 அடி அகல சாலையினை நீக்கம் செய்வது தொடர்பாக பொது மக்கள் அறியும்வண்ணம் தினமணி தமிழ் மற்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில தினசரி நாளிதழிலும் 20.02.2020 அன்று விளம்பரம் செய்யப்பட்டுள்ளதாக செய்தி மக்கள் தொடர்பு துறை வெளியீட்டு ஆணை..28/விளம்பரம்/2020, நாள்.. 19.02.2020 மற்றும் அதற்கான விளம்பர கட்டணம் தொகை ரூ.71,098/—ம் அட்வேவ் அட்வர்டைசிங் பிரைவேட் லிமிடெட், சென்னை (பில் எண்.. AD/1254/11, நாள்.. 26.02.2020) அவர்களுக்கு தொகை வழங்குமாறு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி செலவினத்திற்கான விளம்பர தொகை ரூ.71,098/—ம் நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், திருச்சிராப்பள்ளி கோட்டம் அவர்களின் காசோலை எண்..000111 HDFC வங்கி, நாள்.. 11.03.2020ல் இந்நகராட்சிக்கு ஆணையர் பெயரில் வரப்பெற்றுள்ளது. மேற்படி காசோலை தொகை ரூ.71,098/—ம் நகராட்சி வருவாய் நிதியில் 17.03.2020ல் வரவு வைக்கப்பட்டுள்ளது.

ஆகவே, மேற்படி விளம்பர கட்டணம் தொகை ரூ.71,098/—ம் அட்வேவ் அட்வர்டைசிங் பிரைவேட் லிமிடெட், சென்னை அவர்களுக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.. மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்..5261/2019/எப்1)

**தீர்மானஎண்.. 467 … அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது …**

**<u>பொருள் எண்..10</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நடைபெறும் பணிகளுக்காக இயங்கிவரும் 9 எண்ணிக்கை TATA ACE வாகனங்களுக்கு ஆயில் சர்வீஸ் மற்றும் ஆயில் பில்டர் மாற்றம் செய்வதற்கு உண்டான உத்தேச செலவினம் ரூ.15,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
| | 2) திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் அன்றாட பொது சுகாதாரப் பணியின் அத்தியாவசியம் கருதி மேற்கண்ட வாகனத்தின் பணியினை உடன் மேற்கொண்டு வாகன பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு அவசர, அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று இப்பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 3) அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.15,000/—ஐ பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.. 1407/2020/எச்1) |

**தீர்மானஎண்.. 468 … அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது …**

பொருள் எண்..11

பட்டுக்கோட்டை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TN49 P 4003 JCB வாகனத்தில் உள்ள பழுதினை சீர் செய்யும் பணிக்கு 18.05.2020 தேதியன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | நிறுவனத்தார் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1. | பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN49 P 4003 JCB கனரக வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதினை சீர் செய்யும் பணி | 20,000/– | ஸ்ரீ எர்த் மூவர் ஸ்பேர்ஸ், பண்ணவயல் ரோடு, பட்டுக்கோட்டை | ரூ.17,750/- மட்டும் |
| | | | ஆர்.ஆர். எர்த் மூவர் ஸ்பேர்ஸ், அறந்தாங்கி ரோடு, பட்டுக்கோட்டை | ரூ.18900/- மட்டும் |
| | | | ஓம் சக்தி ஸ்பேர்ஸ் அறந்தாங்கி ரோடு பட்டுக்கோட்டை | ரூ.19300/- மட்டும் |

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1)வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள விலைப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம். |
| | 2) அன்றாட பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியத்தை கருதி, வாகனத்தின் பழுதினை உடன் மேற்கொள்ளும் பொருட்டு 1920 வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் பிரிவு -15 ன் கீழ் பணிகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். |
| | 3) அதற்குண்டான உத்தேச செலவினம் தொகை ரூ.20,000/-யை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.1379/2020/எச்.1) |

**தீர்மானஎண்.. 469 … அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது …**

பொருள் எண்..12

பட்டுக்கோட்டை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் 9 எண்ணிக்கை டாடா ஏ.சி வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ் மற்றும் ஆயில் பில்டர் மாற்றம் செய்யும் பணிக்கு கீழ்கண்டவாறு 15.05.2020 தேதியன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | நிறுவனத்தார் பெயர் | விலைப்புள்ளி (வாகனம் ஒன்றிற்கு) |
|---|---|---|---|---|
| 1. | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் 9 எண்ணிக்கை டாடா ஏசி வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ் மற்றும் ஆயில் பில்டர் மாற்றம் செய்யும் பணிக்கு | 15,000/– | ஹரிஹரன் ஆட்டோ சர்வீஸ், பண்ணவயல் ரோடு, பட்டுக்கோட்டை | தொகை ரூ.1490/- மட்டும் |
| | | | நேதாஜி ஆட்டோ கேரேஜ், பெருமாள் கோவில் தெரு அறந்தாங்கி ரோடு பட்டுக்கோட்டை | தொகை ரூ.1720/- மட்டும் |

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1)வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள விலைப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம். |
| | 2) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண்.1407/2020/எச்.1) |

**தீர்மானஎண்.. 470 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**<u>பொருள் எண்..13</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கொரோனா நோய் தடுப்பு பணியின் போது தேவையான கிருமி நாசினிகளான நீர்த்த சுண்ணாம்பு, பினாயில் ரூ, 1,04,000/- மதிப்பீட்டில் நகராட்சி ஒப்பந்தாரரிடமிருந்து தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் பெறப்பட்டமைக்கு மன்றத்தின் பதிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | பதிவு செய்யலாம்.<br>(ந.க. எண்.1144/2020/எச்1) |

**தீர்மானஎண்.. 471 ... பதிவு செய்யப்பட்டது ...**

**<u>பொருள் எண்..14</u>**

இந்நகராட்சி உட்பட்ட பகுதியில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் கட்டுபடுத்தும் நடவடிக்கையாக வணிக நிறுவனங்களுக்கு வரும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பொது சுகாதார அறிவிப்பு நோட்டீஸ் - 2000, ஸ்டிக்கர் - 2000 மற்றும் விளம்பர பலகை – 5 விலைப்புள்ளி பெற்று ரூ.25,100/- மதிப்பீட்டில் வாசன் ஆப்செட் பிரிண்டர்ஸ் பட்டுக்கோட்டை நிறுவனத்தின் மூலம் தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் பெறப்பட்டமைக்கு மன்றத்தின் பதிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| அலுவலக குறிப்பு | பதிவு செய்யலாம்.<br>(ந.க. எண்.1144/2020/எச்1) |
|---|---|

**தீர்மானஎண்.. 472 ... பதிவு செய்யப்பட்டது ...**

**<u>பொருள் எண்..15</u>**

இந்நகராட்சி உட்பட்ட பகுதியில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்கும் நடவடிக்கையாக தனிமைபடுத்தப்பட்ட வீடுகளில் இருந்து கழிவுளை பெறுவதற்காக மஞ்சள் நிற பாலிதீன் பை – 1200 எண்ணம் விலைப்புள்ளி பெற்று ரூ.11,400/- மதிப்பீட்டில் பரிசித் டிரேடர்ஸ், திருச்சராப்பள்ளி நிறுவனத்தின் மூலம் தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் பெறப்பட்டமைக்கு மன்றத்தின் பதிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| அலுவலக குறிப்பு | பதிவு செய்யலாம்.<br>(ந.க. எண்.1144/2020/எச்1) |
|---|---|

**தீர்மானஎண்.. 473 ... பதிவு செய்யப்பட்டது ...**

**<u>பொருள் எண்..17</u>**

தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாடு திட்டம் (TURIP-2020-2021) –ன் கீழ் பட்டுக்கோட்டை நகராட்சி பகுதிகளில் பழுதடைந்த நிலையில் உள்ள கீழ்கண்ட சாலைகளை மராமத்து செய்து மேம்பாடு செய்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| Sl. No. | W. No. | Name of Work | Type of Work (BT/ CC) | Length in KM | Width in Meter | Estimate Cost Rs. Lakhs |
|---|---|---|---|---|---|---|
| **PACKAGE - I** | | | | | | |
| 1 | 2&7 | Ward 2&7 Keelapalayam river Bund road | BT | 1.160 | 4.00 | 200.00 |
| 2 | 10 | Ward 10 Dharmalingam Nagar | BT | 0.360 | 4.00 | |
| 3 | 13 | Ward 13 Subbiyapillai street | BT | 0.160 | 8.00 | |
| 4 | 10 | Ward 10 Valavanpuram Yarikarai | BT | 0.800 | 4.00 | |
| 5 | 12 | Ward 12 Srinivasapuram river Bund road | BT | 0.540 | 4.00 | |
| 6 | 25 | Ward 25 RETC Back side river bund road | BT | 0.720 | 4.00 | |
| 7 | 24 | Ward 24 Nadimuthu nagar mainroad(From mayilpalayam junction to Boys Hr school Entrance) | BT | 0.180 | 8.50 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **8** | **24** | Ward 24 Nadimuthu nagar lane | **BT** | **0.070** | **4.00** | |
| **9** | **25** | Ward 25 Nadiyambalpuram river bund cross road | **BT** | **0.080** | **4.00** | |
| **10** | **19** | Ward 19 Vivekantha nagar | **BT** | **0.120** | **4.00** | |
| | | **TOTAL** | | **4.190** | | |
| | | **PACKAGE - II** | | | | |
| **11** | **27** | Ward 27 State bank colony and Gandhi nagar Near ASM pump room | **BT** | **0.250** | **4.00** | **200.00** |
| **12** | **7&10** | Ward 7&10 Thattankullam to Sunnambukara street | **BT** | **1.040** | **4.00** | |
| **13** | **30** | Ward 30Sivakkollai river Bund road | **BT** | **1.040** | **4.00** | |
| **14** | **29** | Ward 29 NGGO colony | **BT** | **0.360** | **4.00** | |
| **15** | **31** | Ward 31 Letchathopu near Ration shop | **BT** | **0.180** | **4.00** | |
| **16** | **30** | Sivakkollai SV nagar 5TH street | **BT** | **0.215** | **4.00** | |
| **17** | **33** | Ward 33 Vettikadu ganapathi nagar | **BT** | **0.110** | **4.00** | |
| **18** | **31** | Letchathopu River Bund road | **BT** | **0.240** | **4.00** | |
| **19** | **30** | Ward 30 Pasumpon nagar | **BT** | **0.180** | **4.00** | |
| **20** | **29** | Ward 29 Vasantham nagar | **BT** | **0.100** | **4.00** | |
| | | **TOTAL** | | **3.715** | | |
| | | **PACKAGE - III** | | | | |
| **21** | **30** | Wrad 30 Pasumpon nagar | **BT** | **0.200** | **4.00** | |
| **22** | **27** | Ward 27 Bharathi salai | **BT** | **0.400** | **4.00** | |
| **23** | **31** | Ward 31 Latchathopu Ayya nagar | **BT** | **0.270** | **4.00** | **100.00** |
| **24** | **33** | Ward 33 Maharajasamutheram Burial ground road | **BT** | **1.170** | **4.00** | |
| | | **TOTAL** | | **2.040** | | |
| | | **GRAND TOTAL** | | **9.945** | | **500.00** |

**அலுவலக குறிப்பு:**

1) மதிப்பீடுகளுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் TURIP – 2020-21 ன் கீழ் நிதி ஒதுக்கீடு வழங்கிட கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 3385/2020/இ.1)

**தீர்மானஎண்.. 474 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**பொருள் எண்..18**

இந்திய அரசின் வீட்டு வசதி நகர்புற வளர்ச்சி துறை, நியூ டெல்லி அவர்களின் கோப்பு எண்.. K-K- 12011(11) 27/2017 – UPA – III Section EFS – 3144175, நாள்.. **28.11.2019**–ன்படி சாலையோர வியாபாரிகளின் (SUSV) வாழ்வாதாரத்தை மேம்படுத்த Deendayal Antyodaya Yojana – National Urban Livelihood Mission (Day – NULM) திட்டத்தின் கீழ் புதிய வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி பொருள் தொடர்பாக நகர சாலையோர வியாபாரிகளுக்கு விபரம் தெரிவிக்கும் வகையில் **25.01.2020** அன்று காலை **11.00** மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நகராட்சி ஆணையர், சுகாதார அலுவலர், காவல் துறை ஆய்வாளர், உதவி காவல் ஆய்வாளர் போக்குவரத்து துறை, நகரமைப்பு அலுவலர், அரசு பணியற்ற அலுவலர்கள் (NGO), குடியிருப்போர் நல சங்க பிரதிநிதி, வர்த்தக சங்க பிரதிநிதி, சாலையோர வியாபாரிகள் குழு உறுப்பினர்கள், நெடுஞ்சாலை துறை அலுவலர் மற்றும் இந்து சமய அறநிலைய துறை அலுவலர் ஆக மொத்தம் **15** நபர்களைக் கொண்டு சாலையோர வியாபாரிகள் குழு கூட்டம் நடத்தப்பட்டது. மேற்படி கூட்டத்தில் மத்திய அரசின் புதிய வழிகாட்டுதல்கள் அனைவருக்கும் தெரிவிக்கப்பட்டது. பின்னர் மேற்படி புதிய வழிகாட்டுதல்கள் வியாபாரக் குழுவின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்பட்டது. மேற்படி குழுவில் கீழ்க்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

| | |
|---|---|
| **1.** | மத்திய அரசின் புதிய வழிகாட்டுதலின்படி சாலையோர வியாபாரிகளுக்கு சான்றிதழ் மற்றும் அடையாள அட்டை வழங்க தீர்மானிக்கப்பட்டது. |
| **2.** | அரசின் உத்தரவு மீண்டும் இதுகுறித்து வரப்பெற்ற பின்னர் மறு கணக்கெடுப்பு நடத்த தீர்மானிக்கப்பட்டது. |
| **3.** | போக்குவரத்தை சரிசெய்ய / முறைப்படுத்தும் நோக்கில் சாலையோர கடைகளை அகற்றுதல் / வேறு இடத்திற்கு கொண்டு செல்ல சட்டப்படியான நடவடிக்கைகளை வியாபாரக் குழுவின் ஒப்புதலுடன் செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டது. |

மேலும் சாலையோர வியாபாரிகளுக்கு விற்பனை சான்று (Vending Certificate) **158.** சாலையோர வியாபாரிகளுக்கு சான்றிதழ் வழங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ. 25,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **அலுவலக குறிப்பு** | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.. 7737/2015/எப்1) |
|---|---|

**தீர்மானஎண்.. 475 … அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது …**

**ஆணையர் / தனிஅலுவலர்**
**பட்டுக்கோட்டை நகராட்சி**